தமிழகம் தூர Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

கடல் 8 திருவள்ளுவர் குண்டு 2024 ஆவணி 26 சனிக்கிழமை (11-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily பதிப்பு 287

அமைதித் தீர்வுக்கு ஒரே வழி பேச்சுவார்த்தை

பேச்சுக்கு உதவ பிரிட்டன் தயார்

பிரதமர் ஜோன் மேஜர் அறிவிப்பு

தமிழர்களின் சர்வதேச சம்மேளனத்துக்குப் பதில்

லண்டன், செப்டெம்பர் 11

★ மோதலில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினராலும் பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் அரசியல் தீர்வு ஒன்றினால் மட்டுமே இலங்கையில் நிரந்தர அமைதியைக் காணமுடியும் என்று நாமும் எமது ஐரோப்பிய சகாக்களும் நம்புகின்றோம்.

★ பேச்சுக்களை ஆரம்பிக்க எமது உதவியைப் பெற முடியும்.

— இவ்வாறு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி தமிழர்களின் சர்வதேச சம்மேளனம் அனுப்பிய கடிதத்துக்கு பிரிட்டிஷ் பிரதமர் பதிலளித்திருக்கிறார். 1983 இனக்கொலையின் பத்தாவது வருட நிறைவை ஒட்டி லண்டனில் தமிழர்களின் சர்வதேச சம்மேளனம் கடந்த ஜூலை 23 இல் நடத்திய பேரணி, பொதுக்கூட்டம் ஆவெவற்றைத் தொடர்ந்து, கடந்த ஜூலை 14 ஆம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் மேஜருக்கு இக்கடிதம் அனுப்பப்பட்டது.

இக்கடிதத்திற்கான பதிலை பிரிட்டிஷ் பிரதமரின் சார்பில் பிரிட்டிஷ் வெளியுறவு மற்றும் பொதுநல அமைப்பு அலுவலகம், தமிழர்களின் சர்வதேச சம்மேளனத்தின் செயலாளர் திரு. ஏ. சி. சாந்தனுக்கு கடந்த ஆவணி 9 ஆம் திகதி அனுப்பி வைத்தது.

பிரதமரின் சார்பிலான பதில் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பிரதமருக்கு ஜூலை 24 இல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

புலிகளின் கை ஓங்கியுள்ளது

சவூதி பத்திரிகை கருத்து

யாழ்ப்பாணம், செப். 11

இலங்கையில் விடுதலைப் புலிகளின் கை ஓங்கியுள்ளதாக சவூதி அரேபியாவில் இருந்து வெளிவரும் 'ரியாத் டெய்லி' என்ற பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அண்மைக் காலங்களில் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு எதிராக நடத்திய கரும் புலித் தாக்குதலை அப்பத்திரிகை கட்டிக் காட்டியுள்ளது.

இவை ஸ்ரீலங்கா அரசபடையினர் எதிர் நோக்கிய மோசமான அதிரடித் தாக்குதல்கள் ஆகும்.

விடுதலைப் புலிகள் இலங்கையில் மேற்கொண்டு வரும் அதிரடித் தாக்குதல்கள் போன்றவை உலகின் எந்தத் தீவிரவாத அமைப்பினாலும் மேற்கொள்ளப்படவில்லை.

புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் ஸ்ரீலங்காவின் ஒவ்வொரு பகுதியிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இத்தாக்குதல் நடவடிக்கையால் ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் ஆரோக்கியமற்று நிற்கின்றது.

— இவ்வாறு இம்மாதம் 8 ஆம் திகதி வெளிவந்த அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எயர்லங்கா இயக்குநராக வோல்டர் பெர்னாண்டோ!

கொழும்பு, செப். 11

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் வோல்டர் பெர்னாண்டோ எயர்லங்காவின் நிறைவேற்று இயக்குநராக கடந்த திங்கட்கிழமை முதல் நியமிக்கப்பட்டார்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கு வழி விடுவதற்காக திரு. பெர்னாண்டோ அண்மையில் தமது அமைச்சுச் செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்தார் என்பது தெரிந்ததே. (த-எ)

தமிழர்களின் 53 வீடுகள் வெள்ளாவெளியில் எரிப்பு

யாழ்ப்பாணம், செப். 11

மட்டக்களப்பு வெள்ளாவெளி "ரெட்பானா" கிராமத்தில் தமிழ் மக்களின் 53 வீடுகள் கடந்த 2 ஆம் திகதி இரவு படையினர் தீமூட்டி எரித்தனர்.

வீட்டில் இருந்தவர்கள் படையினரின் நடவடிக்கைகளுக்குப் பயந்து ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்த சமயமே அவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கு முதல் நாள் கோபாலபிள்ளை என்பவர் அந்தக் கிராமத்தில் வைத்து படையினரால் படு கொலை செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது

யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். பல்கலைக் கழகத்தின் 18 ஆவது பட்டமளிப்பு விழா இன்று காலை 9.30 மணி முதல்—மூன்று அமர்வுகளில்—கலைராசவலி கலையரங்கில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆ. துரைராஜா இன்றைய விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

இம்முறை மொத்தமாக 641 பேர் தமக்குரிய பட்டங்களைப் பெறவுள்ளனர். இவர்களில் 490 பேர் இன்றைய விழாவில் நேரில் சமுகமளித்து தமக்குரிய பட்டங்களைப் பெற்றுக்கொள்வர்.

இன்றைய விழாவில் இருவர் கலாநிதி பட்டமும் பெறவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

ஹெலி நோட்டம்

நேற்று காலை 10.45 மணியளவில் கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளை மையமாக வைத்து ஹெலி ஒன்று பல தடவைகள் சுற்றி வட்டமிட்டு சென்றது; இதே போன்று குடாநாட்டின் பல இடங்களையும் நேற்று ஹெலிகள் நோட்டமிட்டன

(உ-15-17-143-163)

கிளாலியில் ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், செப். 11

இளாலி கடற்பரப்பிலும், கரையிலும் நேற்றுக் காலை 9.50 மணியில் இருந்து கமார் ஒரு மணி நேரம் ஹெலி ஒன்று வட்டமிட்டு 50 கனிபர் தாக்குதல்களை மேற்கொண்டது. நேற்று முன்தினம் நண்பகலிலும் ஹெலித் தாக்குதல் இடம்பெற்றது.

(உ-3-117)

மீனவர் மீது சூடு

யாழ்ப்பாணம், செப் 11

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இராணுவத்தினரும் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தோரும் இணைந்து [மட்டக்களப்பு வெள்ளாவெளி, நாதனவெளி ஆகிய பகுதியில் மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். சேதவிவரம் தெரியவரவில்லை. (உ-3)

தமிழகஎம்.எல்.ஏ விபத்தில் பலி

சென்னை, செப். 11

தமிழ்நாட்டின் கமலாபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் வி. எம். ரங்கராஜன் நேற்று விடி விபத்தொன்றில் மரணமானார்.

அவர் பயணம் செய்த கார் காஞ்சிபுரம் அருகே பாலம் ஒன்றுடன் மோதியதில் [illegible] பலியானார். [illegible] தார். (உ-9)

பூநகரி வாடியடியில் 3 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 11

பூநகரி - வாடியடிச் சந்தியில் நேற்று முன்தினம் காலை 10.55 மணியளவில் இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல்தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

லெப்டினன்ட் அன்பரசன் அல்லது செல்வன். (முருகேசம்பிள்ளை சரவணபவன் — களபூமி. காரைநகர், தற்சமயம் சீனியர் ஒழுங்கை, கல்வட்டி.

லெப்டினன்ட் சிவம் (சின்னையா சுமலேஸ்வரன் — சோப்பாய் வடக்கு), 2 ஆம் லெப்டினன்ட் பரமாறன் (தங்கராசா தில்லைராஜன் — அன்னசத்திர கேணி, யாழ்ப்பாணம்) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர்.

2 ஆம் லெப்டினன்ட் பரமாறனின் விதுடல் நேற்று மாலை யாழ் சன்மார்க்க ஊடகசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் சோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

லெப். அன்பரசன், லெப். சிவம் ஆகியோரின் விதுடல்கள் இன்று காலை 10 மணிக்கு மூளாய் இற்றார் செயலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து அவை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 1.30 மணிக்கு சோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைகுழியில் விதைக்கப்படும். (உ-3)

பூநகரிப் பாதை விவகாரம்:

புலிகளுடன் அரசு ஒப்பந்தம் செய்யாது!

ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

கொழும்பு, செப். 11

பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பாக புலிகளுடன் அரசு ஒப்பந்தம் எதையும் செய்யவில்லை; செய்யவும் மாட்டாது.

இந்த சாரப்பட அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்தது.

பூநகரிப் பாதை தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் ஆதரவாளர்களான ஐ. நா. தூதரகத்துடனும் அரசு முத்தரப்பு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திடுகிறது என்று நேற்று "த ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தியை மறுத்து ஜனாதிபதி செயலகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

பொதுமக்களுக்கு முழுமையாக அறிவித்த பின்னரே எந்தவித உடன்பாடும் செய்து கொள்ளப்படும் என்றும் அந்த அறிக்கையில் கட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ் குடாவுக்கு பொது மக்கள் பாதுகாப்பாகச் செல்வது, அறிந்தது வருவது

(6 ஆம் பக்கம் பார்க்க)

லலித் கொலையை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்குக

எதிரணிகள் கோரிக்கை

கொழும்பு, செப். 11

லலித் அத்துலத் முதலி கொலை குறித்து விசாரிக்க பக்கச் சார்பற்ற ஆணைக் குழு ஒன்றை நியமிக்கும்படி எதிர்க்கட்சிகள் நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தன.

லலித் மரணவு குறித்த அனுதாபப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது, அப்பிரேரணை மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட எதிர்க்கட்சிப் பிரமுகர் இக்கோரிக்கையை விடுத்தனர்.

"லலித் கொலைச் செய்தியைக் கேட்டு மொனராகலையை விட்டு ஓடியவர்கள் நான்கு மாதங்களின் பின்னர் இன்று தான் அனுதாபப் பிரேரணை கொண்டு வந்திருக்கிறார்கள்" — என்று சுதந்திரக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

இந்த ஆண்டு இறுதியில் கிழக்கு; பின் 1994 ஆரம்பத்தில் வடபகுதி

அரசின் கட்டுப்பாட்டிலாம்

ராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, செப். 11

இந்த ஆண்டின் இறுதியில் கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேற்றப்பட்டு விடுவர் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சந்திரசிறி வைத்தியரத்ன நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

வட இலங்கை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்படும் என்றும்—

இராணுவ நடவடிக்கைகள் மூலம் எல்லை நிர்வாகத்தை மீட்ட பின் கிழக்கில் தேர்தல் நடைபெறும் என்றும் அவர் மேலும் கூறினார். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்ததானம் உயிர் காக்கும்
உயிர் காக்க
சஞ்சீவி
18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு

ஆலயத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(Commercial Bank அருகில்)

முழுநேர வகுப்புக்கள் சிறந்த நூலக வசதியுடன் ஆரம்பமாக இருக்கின்றன. பின்வரும் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. B A Part - I — யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. B A Part - II — " "
3. G A Q — " "
4. G S. Q. — பேராதனைப் பல்கலைக்கழகம்

பாடங்கள்: G.A.Q, B. A, வகுப்புகள் தமிழ், கிறீத்தவம், இந்துநாகரிகம், அரசியல் விஞ்ஞானம், ஆங்கிலம் இலக்கியம், மெய்யியல்.

G S.Q, பாடங்கள்: கணிதம், புள்ளிவிவரவியல்

விண்ணப்பப் படிவங்களை மேற்படி விலாசத்திற்கு 15 — 09 — 1993 தொடக்கம் கிழமை நாட்களில் காலை 9 00 மணி முதல் மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

(சி-5916)

LEO CLUB

JAFFNA COLLEGE
VADDUKODDAI
Lions Club International
District 306 B
BASKET - BALL TOURNAMENT
FOR
Dr.W.R. HOLMES CHALLENGE TROPHY

The above Tournament will be Conducted by the Leo club of Jaffna College, Vaddukoddai, and It is being Sponsored by the Lion's club, Vaddukoddai

Entries for the above tournament are invited from Schools and Clubs in Jaffna District.

Entry fee: Rs. 150/-

Entries Close On: 17th Sep 1993

Draw: 21st of Sep. at 4.00 p m. in the Staff Room at Jaffna College.

Entries are to be Sent to the "Organizing Secretary, Leo Club Jaffna College Vaddukoddai"

Entries forms Can be Obtained from the Organizing Secretary / Mr N, Jeyaranjithan (Shabra)

Organizing Secretary,
Leo Club,
Jaffna College.

Compliments From

S·M·FERNANDO

(C-6091)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிறிக்கெட் மற்றும் கரபந்து ("செற்-அப்" ரீதியான) கற்றுப் போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவிருக்கின்றன. அவற்றின் விபரம் வருமாறு:-

கரபந்தாட்டம்

கழக மைதானத்தில் நடைபெறும் இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மாலை 3-30 மணி:- காங்கேசன்துறை ஐ. வி. க, அணி எதிர் ஆவரங்கால் ம. வி. க. 'பி' அணி.

★ 4 30 மணி:- ஆவரங்கால் ம. வி. க. "ஏ" அணி எதிர் பாரதி வி. க அணி.

கிறிக்கெட்

கனகரத்தினம் ம ம வி. மைதானத்தில் நடைபெறும் மென்பந்து கிறிக்கெட் போட்டிகளில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ காலை 9-30 மணி: தொறேன் வி. க அணி எதிர் அளவெட்டி யுத "பி" அணி.

★ காலை 10-30 மணி:- அரியாலை ஐக்கிய கழகம் "ஏ" அணி எதிர் மஞ்சவனப்பதி வி. க. அணி.

o o o

காரைநகர் தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனத்தின் விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் கற்றுப் போட்டியில் — இன்று காலை நடைபெறும்— இரண்டாம் சுற்று ஆட்டங்களிக் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 8 30 மணி:- குவளை கலைவாணி அணி எதிர் பாரதி வி. க. அணி.

★ 4-30 மணி:- யங்றோயல் அணி எதிர் அண்ணா வி. க, "ஏ" அணி.

ஆலயங்களில்

கடந்த வெள்ளி ஆரம்பமாகிய கோண்டாவில் சிறக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது. விழா நாட்களில் திரு. தா. சிவகுமாரனின் ஆன்மீக இலக்கியப் பேருரைகள் நடைபெறும் (க)

o o o

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் ஆவணி நான்காம் ஞாயிறு அபிஷேக உற்சவம் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறும். (க-173)

o o o

கொழும்புத்துறை துண்டி ஐயனார் கோவில் சங்காபிஷேகம் இன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். (த-17-30)

o o o

சாவகச்சேரி சப்பச்கிமாவடி ஸ்ரீவிஷ்ணு ஆலய மாஹோற்சவம் நாளை காலை 6-00 மணிக்கு ஆரம்பமாகும். (ஒ-117)

o o o

முகமாலை அன்னை வேளாங்கண்ணி மாதாதேவாலய நவநாள் உற்சவம் நாளை மாலை 4 00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் நடைபெற்று மறுநாள் காலை திருநாட்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம் பெறும். (ஒ-117)

மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

மயிலணி, செப். 11

சுன்னாகம் சந்தையோடை சவாரி மைதானத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. சங்குவேலி சனசமூக நிலைய ஆதரவில் இப்போட்டி நடைபெறும். (ஒ-89)

மண்எண்ணெய்

யாழ். பிராந்திய கூட்டுறவு சேவைகள் திணைக்களம் அதன் கீழ் இயங்கும் ஆறுபத்திரி ஊழியர்களுக்கு மண்எண்ணெய் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

ஒரு ஊழியருக்கு லீற்றர் 18 ரூபா வீதம் 5 லீற்றர் மண்ணெண்ணெய் மழுங்கான் கூட்டுறவுச் சங்கத்தினூடாக வழங்கப்பட்டது. (த-15)

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்
லங்கா சிமெந்து நிறுவன கிளை
(காங்கேசன்துறை)
பகுதி பிரதிநிதிகள் கூட்டம்

எதிர்வரும் 12 - 09 - 1993 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு சுன்னாகம் அலுவலகத்தில் நடைபெறும். தவறாது சமுகம் தரவும்.

(27264) — செயலாளர்

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்	மறைவு
19	11
—	—
05	09
—	—
1960	1990

திருமதி
மாலினி நாகேஸ்வரன்

(முன்னாள் ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

என்றும் எங்கள் உள்ளங்களில் நீங்காத இடங் கொண்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
பெற்றோர், மாமன்மார், மாமிமார்.

(சி/6098)

மரண அறிவித்தல்கள்

அருட்சகோதரி மேரி இளேயா யோசவ்

[திருக்குடும்ப கன்னியர்மடம் பரவஷயூர்]

தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்பச் சபையைச் சேர்ந்தவருமான அருட்செல்வி மேரி இளேயா யோசவ் அவர்கள் 10 - 09 - 93 வெள்ளிக்கிழமை பரவஷயூர் திருக்குடும்பன்னியர் மடத்தில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு (11-09 93) இன்று பிற்பகல் 3 30 மணிக்கு யாழ். புனித சொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலியுடன் இடம்பெறும்.

தகவல்:
மாகாணத் தலைவி

மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம். (27267)

அல்பேட் துரைசிங்கம்

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த அல்பேட் துரைசிங்கம் நேற்று (10 9 93) அகால மரணமானார்.

இவர் வனஜாவின் (ஆசிரியை, யாழ் இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி மனுவதிபிள்ளை - அந்நேன் தம்பதிகளின் அன்பு மகனும், விஜிபிரட், லீலாவதி, இராஜசிங்கம், திருமதி தேவா சந்திராவதி, திருமதி பத்மாவதி கிரிதரன், காலஞ்சென்றவரிளான பேக்கப், இந்திராவதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11-9 93) பிற்பகல் 3.30 மணிக்கு நல்லடக்கத்திற்காக பரிசுத்த சொஞ்சேஞ்சி மாதா கோவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M விஜிபிரட்
(சகோதரன்)

21, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (27263)

சிற்றம்பலம் முருகேசபிள்ளை

மாதகல் விபுலானந்தர் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது முழங்காவிலில் பாரதி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சிற்றம்பலம் முருகேசபிள்ளை (முன்னை நாள் காணி இணைப்பு மேற்பார்வையாளர்) 09 - 09 - 1993 அன்று முழங்காவிலில் காலமாகி விட்டார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், வரதராஜா (பொறியியலாளர் கனடா), நவரத்திரராஜா (கனடா), நகுலேஸ்வரி, தயானந்தராசா, கடம்பேஸ்வரி, மகேஸ்வரன், ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தவராஜசிங்கம், அனுராதா (லண்டன்), மஞ்சுளா (கனடா) ஆகியோரின் மாமனாரும், விஜயராணவன், விஜயசகாரன்கள், விஜயதாரணி, நிவேதா (கனடா) ஆகியோரின் பேரனும், சந்தசாமி (இளைப்பாறிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி காந்தம்மா இராசையா, திருமதி சின்னம்மா திருநாவுக்கரசு, சரவணமுத்து (மேலதிக மாவட்டப் பதிவாளர், கல்முனை) ஆகியோரின் சகோதரரும், கணேசரதிநிம் (பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்), தங்கராஜா (கணக்காளர், பண்டத்தரிப்பு, ப.நோ.கூ. சங்கம்), கணேசலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முழங்காவிலில் நடைபெறுகின்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இ. தங்கராசா

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (6477)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலிருந்து திரும்பிய அகதிகள் தங்கியிருந்த முகாம் திடீர் சோதனை

பொலீஸாரின் நடத்தைக்கு யூ. என். எச். சி. ஆர். ஆட்சேபம்

கொழும்பு, செப். 11

தமிழகத்திலிருந்து திருகோணமலை வந்த ஈழ அகதிகள் தங்கியிருந்த ஹோட்டல் ஒன்று திடீரென்று பொலீஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டு அகதிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இச்சம்பவத்துக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரக (யூ. என். எச். சி. ஆர்.) அதிகாரிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தமிழகத்திலிருந்து 515 ஈழ அகதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை 'நிக்கோபார்' கப்பலில் வந்து உப்பு வெளியில் உள்ள 'சிலோட்' தற்காலிக ஹோட்டல் அகதி முகாமில் தங்கி இருந்தனர்.

இவர்கள் வந்து அடுத்த தினமான புதன்கிழமை காலை இந்த அகதி முகாமுக்கு ஜீப்பிலும் டிரக்குகளிலும் பொலீஸார் திடீர் என வந்தனர். அகதி முகாமைச் சுற்றி வளைத்து காவல் போட்டனர்.

முகாமில் இருந்து எவரும் வெளியேறக் கூடாது என்று உத்தரவிட்ட பொலீஸார், ஒவ்வொருவராகத் தமது பொதிகளை எடுத்து வந்து திறந்து காட்டும்படி உத்தரவிட்டனர்.

பொலீஸாரின் நடவடிக்கைக்கு, முகாமுக்குப் பொறுப்பாக இருந்த யூ என். எச். சி. ஆர். அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்த போதிலும், பொலீஸார் அதற்குச் செவி மடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

"இலங்கையில் எந்த விதத் தொல்லையும் இருக்காது. சொந்த ஊருக்குச் சென்று குடியேறலாம்" என்று தமிழ் நாட்டில் உள்ள யூ. என். எச். சி. ஆர். அதிகாரிகள் தமக்கு உத்தரவாதம் அளித்திருந்தனர் என்றும் இதனை நம்பியே நாம் இலங்கை திரும்புவதற்கு சம்மதித்ததாகவும் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு மாத காலத்து முன்பும் இதே போன்ற சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் இருந்து திரும்பிய அகதிகள் வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்படுவதற்காக திருமலையில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டபோது அவர்களைச் சோதனையிட இராணுவத்தினர் முற்பட்டனர்.

யூ. என். எச். சி. ஆர். அதிகாரிகளின் ஆட்சேபனையை அடுத்து ராணுவத்தினரின் சோதனை முயற்சி கைவிடப்பட்டது. (இ-5)

விண்ணப்பிக்கலாம்

அரியாலை செப். 11

இலங்கை தோல் பொருள் நிறுவனத்தில் மத்திய தர தொழில் நுட்ப [சேவையின் வகுப்பு இரண்டுக்கு படவரைஞர்களை] ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான விவரங்கள் கடந்த மாத 20 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரமாகி உள்ளது. (த-17)

புலிகளை தோற்கடிப்பதே நோக்கமாம்

தற்போதைய யுத்தத்தில் பொது மக்களின் இழப்புகளைத் தவிர்ப்பதும், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதுமே எமது நோக்கமாகும்.

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் ஜெனரல் ஹமிட்டன் வனசிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

சாதாரண மக்களிடம் இருந்து விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி அவர்களைத் தோற்கடிப்பதே எமது பிரதான நோக்கம் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேக்ஷகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பௌதிக இரசாயனவியலில் பேராசிரியர் / புள்ளி விபரவியலில் பேராசிரியர்
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் (தகுதி காண்) / உதவி விரிவுரையாளர் (தகுதி காண்) / தாவரவியல் / இரசாயனவியல் / கணனி விஞ்ஞானம் / கணிதமும் புள்ளிவிபரவியலும் / பௌதீகவியல் / விலங்கியல்
3. தற்காலிக உதவி விரிவுரையாளர் / தாவரவியல் / இரசாயனவியல் / கணனி விஞ்ஞானம் / கணிதமும் புள்ளி விபரவியலும் / பௌதீகவியல் / விலங்கியல்
4. தற்காலிக செய்முறை காட்டுனர் / தாவரவியல் / இரசாயனவியல் / கணனி விஞ்ஞானம் / பௌதீகவியல் / விலங்கியல்
5. தற்காலிக போதனாசிரியர் கணிதமும் புள்ளி விபரவியலும்

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென / துறைத்தலைவராலும் பீடாதிபதியாலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதி காண்) என்ற பதவிப் பெயரை அளிக்க முடியும் என்பதுடன் துணைவேந்தரால் ரூபா 6050 — 10 X 250 — 8,550/- (மாதமொன்றிற்கு) என்ற சம்பள அளவுத் திட்டத்தில் அவரை வைக்கவும் முடியும்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேன்பிரிவு) உடன் சித்தி பெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் (தகுதி காண்), ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதி காண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இச் சம்பள அளவுத்திட்டம் 1994 - 01 - 01 இல் இருந்தே அமுல்படுத்தப்படும்.

சம்பள அளவுத் திட்டம்:

பேராசிரியர்:
ரூபா 16100 — 6 X 400 — 18,500/- (மாதமொன்றிற்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I:
ரூபா 12275 — 8 X 325 — 15,325/- (மாதமொன்றிற்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II:
ரூபா 10650 — 5 X 325 — 12,275/- (மாதமொன்றிற்கு)

விரிவுரையாளர் (தகுதி காண்):
ரூபா 6050 — 10 X 250 — 8,550/- (மாதமொன்றிற்கு)

உதவி விரிவுரையாளர் (தகுதி காண்):
ரூபா 5270/- மாதமொன்றிற்கு (நிலையானது)

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
1993 - 12 - 31 ஆம் திகதி வரை ரூபா 4,585/- (நிலையானது) மாதமொன்றிற்கு
1994 - 01 - 01 இல் இருந்து ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றிற்கு

★★ தற்காலிகச் செய்முறை காட்டுனர்:
1993 - 12 - 31ஆம் திகதி வரை ரூபா 3,835/- (நிலையானது) மாதமொன்றிற்கு
1994 - 01 - 01 இல் இருந்து ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றிற்கு

★★ பெறுபேறுகளுக்காக காத்திருப்போர் அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா 3660/- [நிலையானது] மாதச் சம்பளத்தில் 1993 - 12 - 31 வரை வைக்கப்படுவர். 1994 - 01 - 01 தொடக்கம் ரூபா 4,100/- [நிலையானது] மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.

குறிப்பு:

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 579ஆம் இலக்க, 1993 ஆண்டு 8ஆந் திகதியச் சுற்று நிருபத்திற்கு ஏற்ப நிரந்தர ஊழியர்களிற்கான மேற்குறித்த சம்பள அளவுத் திட்டங்கள் 1994 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்.

இத்துடன் 1994 டிசம்பர் 31ஆம் திகதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும்படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25% நிரந்தர, தற்காலிகப் பணியாளர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படும்.

9/93ஆம் இலக்க 1993-05-12ஆந் திகதியப் பொது நிர்வாகச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின்படி மாதாந்தப் படியாக ரூபா 600/- கொடுப்பனவு செய்யப்படும்.

இத்துடன் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- புத்தகப்படி செலுத்தப்படும். இப்படியானது ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப்பணமாகச் செலுத்தப்படுகிறது. 1994-01-01 தொடக்கம் செலுத்தப்படும் படி ஆண்டுக்கு ரூபா 10,000/-ம் அதுதவிர ஆண்டுச் சம்பளத்தினதும் நிலுவையிலுள்ள பணிய நிறைவேற்றுவதற்கான படியினதும் 10% ஆகும்.

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்விற்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்களும் தற்காலிகப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். பேராசிரியர் பதவிகளான விண்ணப்ப முடிவு திகதி 1993-12-31 இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 1993-10-31.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் நிதியமைச்சில் ரூபா 20/ ஐச் செலுத்திய பின்னர் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் கையுறையிட்டு ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்ட 23 X 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நிதியச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் நிறைவுத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமானபடியில் வைக்கப்படுவர்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1993.09.08

(இ-5914)

பிரபாகரனை நூறு நாட்களுக்குள் பிடித்து வராவிட்டால் போராட்டம்

சுப்பிரமணியசுவாமி அறிவிப்பு

சொச்சி, செப். 11

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நூறு நாட்களுக்குள் பிடித்து வராவிட்டால் [நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டம் நடத்தப் போவதாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி அறிவித்திருக்கிறார்.

கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜீவ் காந்தியை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டிய பிரபாகரனைப் பிடிக்காதவரை ராஜீவ் காந்தியின் பிறந்தநாள் விழாக்களுக்கு அர்த்தம் கிடையாது. பிரபாகரனை 100 நாட்களுக்குள் பிடித்துவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டம் நடத்தப்படும்.

பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டு வருவது தொடர்பாக மத்திய அரசு ஒரு அடிகூட எடுத்துவைக்கவில்லை.

பிரபாகரனை இலங்கை அரசால் பிடிக்கமுடியாவிட்டால் அதற்கு இந்திய அரசு உதவவேண்டும்.

பாகிஸ்தானுடன் விடுதலைப் புலிகளுக்கு ரகசிய உடன்பாடு இருக்கிறது. சென்னை வெடி விபத்து அவர்களின் கைவரிசைதான்.

நரசிம்மராவ் அரசு செயல்படும் விதம் குறித்து எங்கள் கட்சிக்கு மன நிறைவு இல்லாத போதிலும் இப்போது தேர்தல் வரக்கூடாது என்பதால், இ. காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு அளித்து வருகிறோம்.

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள், வெளிநாட்டுக் கொள்கைகள் எல்லாம் பல ஆண்டுகளாக நான் வலியுறுத்தி வந்தவைதான்.

—இவ்வாறு சுப்பிரமணிய சுவாமி கூறினார். (உ-5)

புலிகளின் தாக்குதலை முறியடிக்க கடற்படையைப் பலப்படுத்த முயற்சி

5 "வோட்டர் ஜெட்" படகுகளே சேவையில்

விடுதலைப் புலிகளின் கடற்கரும்புலிகள் கிளாலியிலும் பருத்தித்துறையிலும் நடத்திய தாக்குதல்களினால் ஸ்ரீலங்கா கடற்படையினர் பலம் குன்றி இருப்பதாகவும் —

வடபகுதிக் கடற்பரப்பை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும் புலிகளின் விநியோக மார்க்கத்தைத் தடை செய்வதற்கும் கடற்படையினரின் பலம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் — பாதுகாப்பு அதிகாரிகளும் ஆய்வாளர்களும் கருதுவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இஸ்ரேலிய தயாரிப்பான "சப்பர் டோறா" பீரங்கிப் படகு ஒன்று அழிக்கப்பட்டது. இதில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு 20 எம். எம். பீரங்கிகளும், இதன் வேகமும் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுக்கு அச்சுறுத்தலாக இருந்தன.

கடற்படையிடமுள்ள விரைந்து சென்று தாக்குதல் நடத்தும் 15 படகுகளில் "சப்பர் டோறா"வும் ஒன்றாகும் மூன்று ராடார் கண்காணிப்புக் கப்பல்களின் வழிகாட்டலின் கீழ் விடுதலைப் புலிகளின் கப்பல்களை இடைமறிப்பதற்கு இது பயன்படுத்தப்பட்டு வந்தது.

"சப்பர் டோறா" பீரங்கிப் படகு அழிக்கப்பட்டது, அதற்கு முன்னர் கிளாலி கடலில் இரண்டு "வோட்டர் ஜெட்" ரோந்துப் படகுகள் அழிக்கப்பட்டது ஆகிய சம்பவங்களால் கடற்படையினர் தற்போது பெரிய பயமுறுத்தல்களை எதிர்நோக்கி உள்ளனர். இந்தச் சம்பவங்களில் 21 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

கிளாலி கடலேரிப் பகுதியில் ரோந்து வேலைகளுக்காக "வோட்டர் ஜெட்" படகுகள் கடற்படையினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் 10 'வோட்டர் ஜெட்' படகுகள் கடற்படையினரிடம் இருந்தன.

கடலேரிப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளுக்கு ஏற்றவையாக இவை இருந்தன. ஆனால் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இந்த "வோட்டர் ஜெட்" படகுகளின் எண்ணிக்கையை 5 ஆகக் குறைத்து விட்டன.

திறமை வாய்ந்தவர்களையும், கடற்படைப் படகுகளையும் மீண்டும் ஈடு செய்வதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்றும் பணமும் செலவாகும் என்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கடல் கடந்த நாடுகளில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துப் பொருள்களைப் பெறுவதைத் தடுக்கக் கூடிய விதமாக கடற்படையின் பலம் அதிகரிக்கப்பட வேண்டும். இந்த யுத்தத்தில் நாம் வெற்றி கொள்ளக்கூடிய சாதகமான நிலையை கடற்படைப் பலத்தை அதிகரிப்பது மூலமே ஏற்படுத்தலாம் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட வேகமாகச் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய இரு கப்பல்களுக்காக கடற்படையினர் தற்போது காத்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சிறுவர்களுக்கான லுமாலா அரைச் சைக்கிள் மற்றும் Triumph சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 20, செல். பீற்றர்வீ லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (அடைக்கலம் மாதா கோவிலுக்குச் சமீபமாக) (27256)

இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8-30—11-00 வரை கதிரம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27255)

G.C.E. A/L க. பொ. த. உயர்தரம் தமிழ் மாதிரி வினா-விடை பகுதி I—II உள்ளடங்கியது. திரு. காரை க. செல்வராசா. விற்பனை யாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. (பி-6058)

விற்பனையாகிறது

க. பொ. த. சாதாரணம் 10 மாதிரி வினாத்தாள்கள் 5 வினாத்தாள்களும் விடைகளும் வெளியீடு உயர் கல்விப் பதிப்பகம், பூபாலசிங்கம் புத்தகசாலை. (பி-6056)

வெளிவந்துவிட்டது

மீண்டும் O/L மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பரீட்சை நோக்கு வெளியாகிவிட்டது. சமூகக் கல்வி முழுப்பாடத் திட்டத்தையும் உள்ளடக்கியது. சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆசிரியர்: S. K. சகுந்தன். மொத்தமாக பெற்றுக்கொள்ள கிளம் மெடிக்கல் புத்தகசாலை, சாவகச்சேரி. (6469)

வியாழமாற்றம் நன்மையா

12 - 10 - 93இல் நிகழும் வியாழமாற்றம் நன்மை பயக்குமா? உலக இலக்கை பலன்கள் உட்பட 12 இராசிகளுக்குமான பலாபலன்கள். வெளியீடு: திருக்கணித நிலையம். 10/- மட்டுமே. கிடைக்கும் இடம்! கனகா றேடேர்ஸ், திருநெல்வேலி. (27180)

ஆண்டு 6 அனுமதித்தேர்வு

ஆண்டு 5 மாணவருக்கு பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதித் தேர்வு 12-09-93 ஞாயிறு முற்பகல் 8-00 மணி, முற்பகல் 11-00 நடைபெறும். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27257)

ஆண்டு - 4

1994 புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய வகுப்புகள் 11 - 9 - 93 சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றன. தொடர்பு: நாவலர் கல்விக் கழகம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (27242)

ஆண்டு - 4 புலமைப்பரிசில்

ஆண்டு 4 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை 12-9-93 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். தொடர்பு: நாவலர் கல்விக் கழகம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (27243)

துர்க்கா திருமண சேவை

ஆண், பெண் இருபாலாருக்குரிய சகல குறிப்புகளும் இருக்கின்றன. உடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை. வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (6643)

மணமகன் தேவை

லண்டன் கருக்கொழுத்தில் அதிகித்தி, கம்பியூட்டர் கணணியில் ஓரளவு தேர்ச்சி, யாழ். வண்ணியில் உத்தியோகம், 32 வயது, இளமைக் கவர்ச்சிமிக்க பொது நிறம், 5' 5" சதயம், கிரக பாவம் அற்ற, யாழ். இந்து பாரம்பரிய நற்குடும்பப்பாங்கான பெண்ணுக்கு பெற்றோர் பட்டப் படிப்புத் தேர்ச்சி, நற்பண்பு உள்ள மணமகனைத் தேடுகின்றனர். வெளிநாடரயின் இலங்கையில் விவாகம் செய்து Sponsor செய்யக்கூடியவராயின் விரும்பத்தக்கது. இல. 916, மே/பா உதயன். (6474)

நாய்க் குட்டிகள்

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் சகல தடுப்பூசிகளும் போடப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: இலக்கம் 48/1, 1ஆம் ஒழுங்கை, [ஐங்கரன் விளையாட்டுக்கழக ஒழுங்கை] பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (பி-5913)

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

புதிய பிரிவு

A/L 94, 95

கணக்கியல்

திரு. N. ராஜன்
B Com. (Hons)
M.A.A.T. (S L)

ஆரம்பம்!
14-09-1993
செவ். 4-00 p.m
(பி-6074)

நவகைடன்ஸ்
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L MATHS
U. குணம்
வார இறுதி வகுப்புகள்

94 A/L
(1 வருடம்)
PURE:
நுண்கணிதம் 10 a.m.
APP:
நீர்நிலையியல் 11 a.m

95 A/L
PURE:
நுண்கணிதம் 1 p m.
APP:
காவிகள் 2 p. m.
(பி-6079)

மணி விழா

வலிகாமம் தெற்கு, செப். 11 பிரபல எழுத்தாளர் திரு. அரு. வை. நாகராஜனின் மணிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு - மேல் மாடி மண்டபத்தில் நடைபெறும். தெல்லிப்பளை, இணுவில் கலை இலக்கியக் கழம் இவ் விழாவை ஒழுங்கு செய்துள்ளது. (உ-152)

வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 11 கடந்த செவ்வாய் இரவு 11 மணியளவில் பூநகரிப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் இளங்கோ அல்லது இளந்தேவன் (தர்மலிங்கம் சிறிதரன் —சரமன்கிராய், பூநகரி, மன்னார்) வீரச்சாவடைந்தார். (இ-5)

உளவியல் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், செப். 11 "நான்" சஞ்சிகையினர் நடத்தும் உளவியல் ஆய்வரங்கு - 8 இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் உள்ள எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். (உ)

குழாய்க் கிணறு

வலி மேற்கு பிரதேச சபை அராலி மேற்கு சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள மாவீரர் கல்லறைக்கு அமைதானத்தில் குழாய்க் கிணறு ஒன்றை அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது. (உ-161)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

விஞ்ஞானபீட இரண்டாம் அரையாண்டு பரீட்சை - 1992

இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி முதலாம் வருடப் பரீட்சையுடன் ஆரம்பமாக உள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 24 - 09 - 1993இற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விவரங்களைப் பரீட்சைக் கிளை உதவிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது கடிதவிசாரணைப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ. X 10 செ. மீ அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்; தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

–பதிவாளர்,
(பி-5907)

அந்தியேட்டி அழைப்பு

தற்பரானந்தன் முகுந்தன்
(யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்)

மூளாய் க. நாகமுத்து, தெல்லிப்பளை காளஞ் சென்ற கிருஷ்ணர் முத்தையா ஆகியோரின் பேரனும், தற்பரானந்தன் செல்வநாயகி (பாப்பா) தம்பதிகளின் முதல் புதல்வனுமாகிய முகுந்தனின் 45 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள், மதிய போசனம் ஆகியன நாளை (12—09—1993) ஞாயிற்றுக்கிழமை வட்டுக் கோட்டையில் நடைபெறும்.

இவற்றில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் கல்லூரி மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் அவருடன் ஒருங்கே கற்ற சக மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை. (27240)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

நீதிபதி வீ. பி. சுந்தரலிங்கம்

தோற்றம்: 08—12—1934 மறைவு: 11—09—1991

மண்பிள் உறைவிடமாய்
பாசத்தின் ஒளியாய்த் திகழ்ந்த நீர்
எமைப் பிரிந்து சென்று
ஆண்டுகள் இரண்டு ஓடினும்
ஆறாது உங்கள் நினைவு.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.
குடும்பத்தவர்கள்.

51, நாவன்மார் வீதி,
நல்லூர். (27254)

நிரு
ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

O/L 1993
துரித வினா - விடை வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — இந்திரன், மகேந்திரன்
தமிழ் / சமயம் — பண்டிதர்
சமூகக்கல்வி — வேலா
ஆங்கிலம் — மகாலிங்கம்
வர்த்தகம் — நவம்
(பி-6088)

மலிவு விற்பனை

வீட்டுப் பாவனைக்குரிய பாய், பெட்டி, களகு போன்ற சகலவிதமான கைப்பணிப் பொருள்களும், விசேட விலைக் கழிவுடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

தெரிவுக்கு முந்திக் கொள்ளுங்கள்

காலம் 10—09—1993 முதல் 20—09—1993 வரை

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்
சந்தைப்படுத்தும் பிரிவு,
220, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(பி-5910)

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Centre
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

ஆண்டு 4-10, G.C.E. O/L, A/L
SPOKEN ENGLISH

Short - Hand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 13-09-93
(6475)

பட்டதாரிகளைச்
சித்திராலயா
சிந்தை மகிழ வாழ்த்துகிறது

அதிதீவிர முயற்சி சிரத்தையோடு ஆழமாகக் கற்றுத் தடைகளைத் தாண்டிப் பரீட்சைகளில் சித்தி பெற்றுப் பட்டதாரிகளாய் சிந்தை மகிழ வெளியே வரும் நம்பியர், நங்கையர்களை நாங்கள் உள்ளன்போடு பாராட்டி வாழ்த்துகிறோம். வாழ்க! வெல்க!

சித்திராலயா
18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: எம்மிடம் மஞ்சள் (Yellow), கறுப்பு (Black) பல்கலைக்கழக மேலங்கிகள் (Cloak) உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.
(பி-6083)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

திருப்தியில்லாத பதில்

ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டும். அத்தோடு அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் கிடைப்பதற்கு உதவ வேண்டும்.

இந்தக் கோரிக்கை கொண்ட கடிதம் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜான் மேஜரிடம் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கையளிக்கப்பட்டது. தமிழர்களின் சர்வதேச சமகோளனம் பிரஸ்தாப கடிதத்தை பிரிட்டிஷ் பிரதமரிடம் கையளித்தது.

அரச சார்பற்ற சர்வதேச மனித உரிமை அமைப்புகள் பதினைந்து, ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி கூட்டாக உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தன. அந்தக் கோரிக்கைக்கு பிரிட்டன் ஆதரவளித்து உதவ வேண்டும் என்பதே பிரிட்டிஷ் பிரதமரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தின் சாரமாகும்.

ஒரு தேசிய இனத்துக்கு, தனது தலைவிதியை தானே முடிவுசெய்யும், தான் எப்படி வாழவேண்டும் என்பதனை தீர்மானிக்கும், தனது அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்கும் உரிமையுண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் சிவில் சாசனத்தின் மூன்றாவது சரத்து தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமையை கொடு தெளிவாக உறுதிப்படுத்துகிறது

ஒரு மனித குழுமம் தனக்கென ஒரு வாழ்விடம், தனியான மொழி, தனித்துவமான கலை, கலாசாரம், பண்பாட்டு இயல்புகளைக் கொண்டிருந்தால் அதற்குச் சுயநிர்ணய உரிமையுண்டு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம்.

இந்த வரைவிலக்கணத்துக்கு ஏற்ப, ஈழத் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற தகுதிக்கு உரியவர்கள். எனவே அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. அந்தச் சுயநிர்ணய உரிமையை உலக நாடுகளைக்கொண்டு அங்கீகரிக்கச் செய்வதும், அதற்கான முயற்சியும் பெரிதும் வரவேற்கத்தக்கனவாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் எவ்வித அக்கறையும் கொண்டிருக்கவில்லை. வெளிநாடுகள் சமரசம் செய்து வைப்பதனையும் விரும்பவில்லை. சர்வதேச நிறுவனங்களான ஐ. நா போன்றவை இதில் தலையிடுவதையும் விரும்பவில்லை. மாறாக தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதற்காக தமிழர் தாயகத்தை துண்டாடும் முயற்சியில் தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது.

ஆகையால், தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கு, உலக நாடுகளைக் கொண்டு அதனை அங்கீகரிக்கச் செய்வது ஒரு சிறந்த மார்க்கமாகும்.

அதற்கான வேண்டுகோள் முதலில் பிரிட்டனிடம் கையளிக்கப்பட்டதும் மிகப் பொருத்தமானதே. இரண்டு நாடுகளான தமிழர் தேசத்தையும், சிங்களவர் தேசத்தையும் ஒன்றாக்கிய குற்றத்தைப் புரிந்தவர்கள் பிரிட்டிஷ்காரரே. தமிழ், சிங்கள மக்களின் விருப்பத்துக்கு மாறாக — அவர்களது அனுமதியின்றி— இரண்டு தேசங்களை ஒன்றாக்கியமை இருசாராரினதும் அடிப்படை உரிமைகளை மீறிய குற்றமாகும்.

ஆகவே தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து முன்னர் செய்த குற்றத்துக்கு பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் முதல் நாடாக அது விளங்கவேண்டும்.

அது விடயத்தில் முன்னோடியாகத் திகழ்ந்து ஏனைய நாடுகளையும் அதற்குத் தூண்ட வேண்டும். இது பிரிட்டனுக்குரிய தார்மீகக் கடமையாகும்.

ஆனால் பிரிட்டிஷ் பிரதமர் அளித்த பதில் திருப்திகரமானதாக இல்லை. தமிழரின் சுயநிர்ணய உரிமை என்ற விடயத்துக்கு நேரடியாக வராமல் சமாளித்து நழுவும் பாணியில் அமைந்திருக்கிறது.

720 வீரர்கள் பங்குபற்றும்

யாழ்ப்பாண மாவட்ட தடகள விளையாட்டு விழா

இன்றும் நாளையும் நடைபெறும்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 7.30 மணி முதலும் நாளை காலை 8.45 மணி முதலும் விளையாட்டு விழா நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

மொத்தம் 720 வீரர், வீராங்கனைகள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

நாளை மாலை நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பொது பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்வாசகரும், சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியும் பங்குபற்றுவர். திருமதி. யோ. மாணிக்கவாசகர் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்குவார்.

பத்து வருட இடைவெளிக்குப் பின்னர் கிரிக்கெட், உதைபந்தாட்டம் எல்லே, கரப்பந்தாட்டம் ஆகியனவும் யாழ். மாவட்ட ரீதியாக யாழ். செயலகத்தினால் நடத்தப்பட்டுள்ளது இப்போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கும் நாளை பரிசில்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இப்போட்டிகளான சகல ஒழுங்குகளையும் யாழ் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு. க. கனகராஜ செய்துள்ளார்.

(உ 30-117)

சித்த மருத்துவ மாணவரின்

சத்தியாக்கிரக போராட்டம்; இடைநிறுத்தப்பட்டது!

யாழ்ப்பாணம். செப். 11

கலைப்பீடத்தில் கீழ் இயங்கிவரும் சித்தமருத்துவத்துறையைத் தனிப்பீடமாக மாற்றக் கோரி சித்த மருத்துவ மாணவர்கள் மேற்கொண்டு வந்த சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை முதல் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

சித்த மருத்துவத்துறையை கலைப்பீடத்தில் இருந்து பிரித்து, யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் கீழ் நேரடியாக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பல்கலைக்கழக மாணவ ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் ஏ. பி. ஆர். அலுவிகார உறுதியளித்ததை அடுத்தே சத்தியாக்கிரகப் போராட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.

கடந்த 2 ஆம் திகதி பல்கலைக்கழக மாணவ ஆணைக் குழுவுக்கும் மாணவர் மன்றக் குழுவுக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுக்களை அடுத்தே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டது.

கடந்த 6 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையங்கட்டம் மற்றும் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெற உள்ள பல்கலைக்கழக மாணவ ஆணைக்குழுக் கூட்டம் ஆகியவற்றைத் தொடர்ந்து இது பற்றிய இறுதி முடிவைத் தெரிவிப்பதாகவும் அலுவிகார உறுதியளித்துள்ளார்.

பாலியல் வன்முறை குற்றச்சாட்டு:

பொய் முறைப்பாடு செய்த சிங்களப் பெண்ணுக்கு சிறை

சைப்பிரஸ் நீதிமன்றம் தீர்ப்பு

அரசிடமிருந்து நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக தன்னை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி விட்டார்கள் என்று பொய் முறையிடு செய்த சிங்களப் பெண்ணுக்கு சைப்பிரஸ் நீதிமன்றம் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது

இலங்கையைச் சேர்ந்த நிமினி ஜெயவர்த்தனா (வயது 23) என்ற இந்த இளம் பெண் ஆறு 18 லட்சம் ரூபா சம்பளத்தில் வேலை செய்து வந்தார்.

கடந்த மாதம் 5ஆம் திகதி தன்னை மூன்று பேர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி விட்டனர் என்று நீதிமன்றில் அவர் முறைப்பாடு செய்தார். அதற்காக தனக்கு 50 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் அவர் கோரினார்.

எனினும் நீதிமன்றில் நடந்த விசாரணையின் போது தமது முறைப்பாடு பொய் என்பதை அவர் ஒப்புக் கொண்டார்.

இலங்கையில் உள்ள தனது கணவர், நிறையப் பணம் கொண்டு வராவிட்டால் தன்னை விவாகரத்து செய்து விடுவதாக மிரட்டியதாகவும்- அதனாலேயே பொய் முறைப்பாடு செய்து பணம் சம்பாதிக்கத் தான் திட்டமிட்டதாகவும் அந்தப் பெண் நீதிமன்றில் கண்ணீர் மல்க கூறினார். (உ-5)

நாளை

உருப்பராய் ஞானவைரவர் கோயிலடி சனசமூக நிலைய 43 ஆவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நிலைய முன்றலில் திரு சி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகளில் நாடகம், வில்லுப்பாட்டு ஆகியவையும் இடம்பெறும். (உ)

o o o

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தமிழ்எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும்.

"எங்கே ஸ்புடமும் பாஸ்கணிதமும்" என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். விரிவுரைகளை திரு எஸ். மகேந்திரன் நெறிப்படுத்துவார். (உ)

கால் முறிந்தது

இயக்கச்சியிலிருந்து ஷெல் வீச்சு நடத்தப்பட்ட போது அதற்குப் பயந்து ஓடியவர் இணற்றில் வீழ்ந்து கால் முறிந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு பொற்பதி வீதியிலுள்ள குடியிருப்பில் இடம் பெற்றது (உ-117)

இனப்பிரச்சினை குறித்து

சர்வதேச கல்விமான்கள் கருத்தரங்கு நடத்த ஏற்பாடு

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்களும்; ஐரோப்பிய நாடுகளின் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் சேர்ந்து இனப்பிரச்சினை சம்பந்தமாக கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கான முன்முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த மாதம் லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் துணைவேந்தர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட கல்விமான்கள் பலரும். "இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வும் அதன் மூலம் அபிவிருத்தியும்" என்ற கருத்தரங்கு ஒன்றை நடத்த வேண்டியது அவசியம் குறித்தும் கலந்துரையாடினர்.

அத்தகைய கருத்தரங்கை நடத்துவதன் மூலம் நடைமுறைச் சாத்தியமான திட்டத்தை வகுக்க முடியும் என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

உத்தேச கருத்தரங்கை இலங்கையில் நடத்துவதா அல்லது வெளிநாடு ஒன்றில் நடத்துவதா என்பது குறித்து இன்னும் முடிவாகவில்லை.

எனினும் அதற்கு முன்னர் கருத்தரங்கை நடத்துவதற்கான அனுமதியை இலங்கை வெளிநாட்டு அமைச்சரிடம் கோருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

(ஆ-3)

ஜனித்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி எம்: பி. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

"வடபகுதி யுத்தத்தை நிறைமையாக முன்னெடுத்துச் சென்றவர் ஜனித். அவர் தொடர்ந்தும் அந்தப் பதவியில் இருந்திருந்தால் வடக்கு—கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்திருக்கும்". —என்றார் க. வின் பிரதம கொறடா நிச்சர்ட்பத்திரன. (உ-6-9)

"A" LEVEL CENTRE
JAFFNA
95 புதியபிரிவு
ஆரம்பம்: 11-09 93
SAT
பௌதிகவியல்
ஆசிரியர்:-
Mr. ஜெயசீலன்
B. Sc.
நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். (சி/6093)

உ
அருள்மிகு
நாவலடி
ஞானவைரவர் தேவஸ்தானம்
மயிலு வீதி, ஆறுகால்மடம்
மேற்படி வருடாந்த உற்சவ தினத்தை முன்னிட்டு 12-09 93 ஞாயிறு இரவு 7 00 மணி தொடக்கம் 8.00 மணி வரை பத்துத் தினங்கள்
திரு. ஆறு. திருமுருகன் B.A
ஆசிரியர் அவர்களின்
"பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு"
நடைபெறும். அடியார்கள் அதனைக்கேட்டு இன்புற்று வரவப்பெருமானின் இன்டசித்தியை பெற்றுய்யவும்.
இங்ஙனம்:
நா. ஞா. த. கர்த்தாசபை.
[87266]

அறிவித்தல்

இதன்கீழ் விவரிக்கப்பட்டுள்ளதும், 01 — 09 — 1993 முதல் அமுலில் இருந்து வருவதுமான எமது அங்கத்துவ சங்கங்களின் பெயர் மாற்றங்கள், இக்கூட்டுறவு அமைப்புகளோடு தொடர்பு பட்ட அனைத்துத் தரப்பினரதும் அறிதலுக்கும், தொடர்புகட்குமானதாகும்.

31 — 08 — 1993 வரை		01 — 09 — 1993 முதல்	
01. பருத்தித்துறை - புலோலி தெற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைவுக் கூட்டுறவுச் சங்கம்.		பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.	
02 வலி. கிழக்கு (வ. ம)	,,	அச்சுவேலி	,,
03 கட்டைவேலி-உடுப்பிட்டி	,,	கரவெட்டி	,,
04 வலி. கிழக்கு (தெ. ப)	,,	கோப்பாய்	,,
05 யாழ். மாநகர	,,	யாழ்ப்பாணம்	,,
06 அரியாலை	,,	அரியாலை	,,
07 சாவகச்சேரி	,,	சாவகச்சேரி	,,
08 தென்மராட்சி கிழக்கு	,,	கொடிகாமம்	,,
09 பச்சிலைப்பள்ளி	,,	பளை	,,
10 கோண்டாவில்-இணுவில்	,,	கோண்டாவில்	,,
11 சுன்னாகம்-அளவெட்டி -மல்லாகம்	,,	சுன்னாகம்	,,
12 தெல்லிப்பளை	,,	தெல்லிப்பளை	,,
13 மானிப்பாய்-பரிக்	,,	மானிப்பாய்	,,
14 பண்டத்தரிப்பு-பரிக்	,,	பண்டத்தரிப்பு	,,
15 வல்லு தொகுதி	,,	சங்கானை	,,

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
499 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/5917]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

முருகேசம்பிள்ளை சரவணபவன்
(லெப்டினன்ட் அனந்தன்)

காரைநகர், கனபூமி கொம்பனோடையைச் சேர்ந்தவரும் தற்போது 56, சினியர் ஒழுங்கை, கல்வி, யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமாகிய பொன்னம்பலம் முருகேசம்பிள்ளை (இளைப்பாறிய மாவலிட நந்திப் பரிசோதகர்) — இராசலக்ஷ்மி தம்பதிகளின் அன்பு மகன் சரவணபவன் 09-09-1993 இல் வீரமரணமடைந்தார்.

அன்னார் திருமதி நிர்மலா செல்வரத்தினம், திருமதி றோகினி பரமசாமி, லோகேஸ்வரி, திருமதி சோமதி ரவீந்திரன், சாந்தி, திருமதி நவமணி சிறீஸ் கந்தராசா சோதி, நரேந்திரன், முருகானந்தன், கமலமணிகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், க. செல்வரத்தினம், க. பரமசாமி, செ. ரவீந்திரன், ப. கிறீஸ் கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சினி, நிசாந்தி, மயூரகி, பவித்திரா, கார்த்திகா, அஜந்தன், கதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் கிரியைகள் சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (11 - 09 - 1993) காலை 9 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்படும்.

தகவல்:
க. செல்வரத்தினம்
(மைத்துனர்)

இல. 56, சினியர் ஒழுங்கை,
கல்வி, யாழ்ப்பாணம். (27260)

பொன்னுத்துரை மனோன்மணி

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பொன்னுத்துரையின் அன்பு மனைவியுமான பொன்னுத்துரை மனோன்மணி 30-08-93 இல் காலமாகிவிட்டார்.

இவர் பாலகப்பிரமணியம் (லண்டன்), பாலச்சந்திரன், பாலகிருஷ்ணன், பரமேந்திரன் (கனடா), பாலசரஸ்வதி (காரைநகர்), பரமேஸ்வரி (கனடா), பாலசுந்தரி, பாலசுவந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும் வேலுப்பிள்ளை, அருணாசலம் (கனடா), சண்முகரத்தினம் (காரைநகர் பனாட்டுக் கூவிறுறவுச் சங்கம்), சிவஞானம் (ரூபி பற்றிசார்ச், கிளிநொச்சி), இன்னைமல் (லண்டன்), அன்னலட்சுமி, மனோகரி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரூத் (லண்டன்), றேத் (லண்டன்), சாந்தி லதா, கிருஷ்ணதேவி, கிருஷ்ணவேணி, சங்கீதா, பிரதீபன், துளசி, யசோதரன், மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சோதீஸ்வரன், சோணேஸ்வரன் (கனடா), யசோதா (கனடா), நமணன் (கனடா), தயாபரன், தயாமணி, தயாவதி, தர்சினி, சிவகௌரி, சிவரூபி, பிரதீபன், புவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை காரைநகரில் 30-08-93-இல் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொ. பாலச்சந்திரன் [ராசு],
(மகன்)

அரால் மத்தி,
கல்வி மூலை,
வட்டுக்கோட்டை. (27265)

சுந்தரலிங்கம் சரோஜினிதேவி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சரோஜினிதேவி 7-9-93 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் சுந்தரலிங்கத்தின் (உரிமையாளர் சாந்தி ரெக்ஸ், கிளிநொச்சி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தரோடையூர் திரு. முருகையா, இரத்தினம்மாவின் சிரேஷ்ட புதல்வியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 8-9-93 புதன் கிழமை கந்தரோடையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. சுந்தரலிங்கம்.
(கணவர்)

கந்தரோடை,
கல்லாரம். (6648)

பிரம்மஸ்ரீ இ.பாலசுப்பிரமணியஐயர்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் வித்துவான் பிரம்மஸ்ரீ இ. பாலசுப்பிரமணியஐயர் B.A காலமானார்.

இவர் இரத்தினசாமி ஐயர் தம்பதிகளின் புத்திரரும், சாரதாம்பாளின் அன்புக் கணவரும், சிறீதரன் (கொழும்பு), திருமதி சாந்தா சகோதரன் (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், ஜெயலக்ஷ்மி, யசோதரன் (Accounting Systems & Services Ltd.) ஆகியோரின் மாமனாரும், கோதாலட்சுமி, சாருமிதா, கதர்சன், சுந்தர்ராம் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று சனிக்கிழமை (11 - 9 - 93) பகல் 11 மணியளவில் வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
யசோதரன்
(மருமகன்)

அடைக்கலத்தோப்பு,
வட்டுக்கோட்டை. (27269)

புலிகளுடன்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக வருங்காலத்திலும் இத்தகைய உடன்பாடு ஒன்றை செய்துகொள்ளும் நோக்கம் அரசுக்கு இடையாது என்பதை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவிக்கிறது.

இப்படியான உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்வதற்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒரு தரப்பாக கருதக்கூடாது என்பதே அரசின் தொடர்ச்சியான நிலைப்பாடாகும்.

நாட்டின் பத்தொன்பது நன்னாளுக்குப் பங்கம் விளைவிக்கும் எந்த ஒரு தரப்புடனும் எவ்வித உடன்பாடும் செய்துகொள்ளப்பட மாட்டாது என்பதை திட்டவட்டமாக தெரிவிப்பதற்கு அரசு விரும்புகிறது.

பொதுமக்களுக்கு நன்கு விளங்கப்படுத்திய பின்னர் மாத்திரமே எந்த ஒரு தரப்புடனும் ஒப்பந்தம் செய்துகொள்வது பற்றி அரசு கவனத்துக்கு எடுக்கும்.

சட்டபூர்வமாக அமைக்கப்பட்டுள்ள அமைப்புகளுடன் மாத்திரமே அரசாங்கம் ஒப்பந்தத்தை செய்துகொள்ளும். அதுவும் சட்டத்தின் பிரகாரம் அத்தகைய உடன்பாடுகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். — இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் விடுதலைப் புலிகள் நிராகரித்த முத்தரப்பு ஒப்பந்தத்தின் வரைவையே "த ஐலண்ட்" பத்திரிகை நேற்று பிரசுரித்ததாக ஆசிரியருக்கான ஐ.நா. தூதரகத்தின் இலங்கை விவிடப் பிரதிநிதி பிற்றர் நிக்கிலாஸ் தெரிவித்துள்ளார். (உ-ஏ-6-162)

பேச்சுக்கு..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்ட கடிதத்துக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

பிரதமரின் சார்பில் அதற்கு பதிலளிக்கும்படி நான் கேட்கப்பட்டுள்ளேன்.

இலங்கை மோதல் பற்றிய பின்னணி குறித்த தங்கள் பகுப்பாய்வை கவனமாகப் படித்தோம்.

இவ்வளவு நீண்ட காலமாக சண்டை தொடருவது துக்கரமானது.

மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வடக்கு—கிழக்கு மக்கள் என்பது தெளிவானது. அவர்களது நிலை வரக் சந்தேகமின்றி கஷ்டமானதாகும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை மிகவும் தெளிவானது.

மோதலில் சம்பந்தப்பட்ட சில தரப்பினராலும் பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் அரசியல் தீர்வு ஒன்றினால் மட்டுமே இலங்கையில் நிரந்தர அமைதியை அடைய முடியும் என்று நாமும் எமது ஐரோப்பிய சகாக்களும் நம்புகின்றோம்.

நிரந்தரத் தீர்வு காணுவதற்காக முன்னெடுத்துச் செல்லக் கூடிய ஒரே பாதையாக இந்தச் செயற்பாட்டு முறையைத் தான் நாம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றோம். இப்படிக் காணப்படும் நிரந்தரத் தீர்வு இலங்கையில் உள்ள அனைத்து மக்களின் உரிமையும் அங்கீகரிப்பதாக இருக்கும்.

பேச்சுக்களை ஆரம்பிக்க எமது உதவியைப் பெறமுடியும் என்று நாம் தொடர்ந்து கூறி வந்துள்ளோம் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கும்.

துரதிஷ்டவசமாக பேச்சுவார்த்தைகள் அண்மையில் நடைபெறும் வாய்ப்பு இல்லை. இவ்வாறு பிரதமர் சார்பாக அனுப்பப் பட்டபதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SUHi
SCHOOL OF DRESSMAKING

சுகி தையற் பாடசாலையின்

பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி
இவ்வாண்டு டிப்ளோமா பயிற்சிபெற்று
வெளியேறும் மாணவிகள் வழங்கும்

★ மனையியல் கண்காட்சி ★

- உடை தயாரிப்பு (Scientific Dressmaking)
- மலர் தயாரிப்பு (Flower making)
- கேக் அலங்காரம் (Cake Icing)

காலம்:- 1993—09 12 ஞாயிறு பிற்பகல் 2.00—7.00
1993—09 13 திங்கள் முற்பகல் 8.00—
மாலை 7.00

சான்றிதழ் வழங்கும் வைபவம் 1993-09—12
ஞாயிறு காலை 10 00 மணி

திருமதி G. நவரட்ணசிங்கம்
(நிர்வாகி)
951/10, சென். யோசவ் வீதி,
வண்ணாரப்பண்ணை,
(புனித சூசையப்பர் குருத்துவக் கல்லூரி அருகில்)

பிரவேச அன்பளிப்பு:- 5/- மட்டுமே

(27263)

மரண அறிவித்தல்கள்

ஆறுமுகம் கனகசபாபதி

யாழ்ப்பாணம் சச்சமோட்டையைச் சேர்ந்த ஆறுமுகம் கனகசபாபதி (ஆதிக்கள் புவிவாழ்வுக் கழகம்) நேற்று (10-09 93) காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயராணி (யாழ். மாநகரசபை), இந்திராணி, குணராணி, புஸ்பராணி, மனோராணி, யசோதரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பொன்னுக்கோன் (யாழ். மாநகர சபை), பிறாங்லின், விக்னராசா, அருள்விக்கம், ரூபி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [11-09-93] பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன்னுக்கோன்
(மருமகன்)

70/9 சச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (27270)

திருமதி சபாரத்தினம் இராசம்மா

கழிபுரம் வடக்கைச் சேர்ந்த திருமதி சபாரத்தினம் இராசம்மா நேற்று [10-09-1993] காலமானார்.

இவர் காலஞ்சென்றவ. சபாரத்தினம் அவர்களின் மனைவியும், திருமதி செ. இராணி, திருமதி ஆ. சறோஜா (கவிஞர்), திருமதி த. சிவனேஸ்வரி (பிரான்ஸ்), திரு. ச. விக்னேஸ்வரன் (சுவிஸ்), திருமதி க. விக்கினேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், செல்வராசா (கொழும்பு), ஆறுமுகநாதன் (சுவிஸ்), துவராசா (பிரான்ஸ்), திருமதி வி. குமுதினி (சுவிஸ்), கனகரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மலேசியாவில் காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னத்துரை ஆகியோரதும், இலட்சுமிப்பிள்ளை காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பேப்பர் மணியம்) ஆகியோரின் ஆசைச் சகோதரியும், சுவிஸிலுள்ளவர்களான செந்தமிழ்ராசா, தனபாலசிங்கம், சந்திரகுமாரி, அருந்தவராசா, நாதினி, ராதினி, சுப்பிரமணி, சபாரதி, பிரான்ஸிலுள்ள நிரோஜன், சரவணன் மற்றும் இரத்தினராசா, தேவராசா, யுவராசா, கிருஷ்ணராசா, நந்தகுமார் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரதான வீதி, கழிபுரத்திலுள்ள இல்லத்தில் இன்று (11-09-1993) நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. இராணி
(மகள்)

பிரதான வீதி (மிச்சடி),
கழிபுரம். (27271)

மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்

வல்வை நெடியகாடு வீதியில்—12 - 09 - 93 ஞாயிறு இரவு 7 மணிக்கு
"கலைக் காவிய நாயகர்கள்" வல்வை ஹெலியன்ஸ் நண்பர்கள் வழங்கும்
வால் நட்சத்திரம் (மாவீரன் அலெக்சாண்டரின் காவியம்)
டிராமாஸ்கோப்
தாயின் மடியில் [இன்றைய வரலாற்று நிகழ்வு]
(ச 114)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெடினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 198/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-09-1993 இல் அச்சிடு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org